1993 அக்டோபர் 26]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அன்னை ஆசிரியர் கழகத்தில், அந்தந்தப் பள்ளிகளில் பயிலுகின்ற மாணவ மாணவியரின் பெற்றோர்களே இடம் பெற வேண்டும் என்று இருப்பதால், கல்வித் தகுதியை நிச்சயமாக, உறுதியாக, அமுல்படுத்துவது இயலாத காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 16, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

16—

பட்டயக் கல்வி (Diploma) படித்தவர்கள் பெயருக்கு முன்னால் தாங்கள் படித்த பட்டயக் கல்வியைப் போடுதல்.

*11033—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறியியல் பட்டம் பெற்றவர்கள்போல பட்டயக் கல்வி (Diploma) படித்தவர்களும் தங்கள் பெயருக்கு முன்னால் தாங்கள் படித்த பட்டயக் கல்வியைப் போட்டால் அரசு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக ஆணை எதுவும் தேவையில்லை என்றும், தொடர்புடைய நபர்களின் பொறுப்பிற்கே விட்டுவிடலாம் என்றும், இந்த அரசு கருதுகிறது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஈ., எம்.டெக். படித்தப் பட்டதாரிகள் கூட தங்கள் பெயருக்கு முன்னால் என்ஜினியர் என்று போடுவதில்லை ஆனால் டிப்ளமோ படித்தவர்கள் தங்கள் பெயருக்கு முன்னால் என்ஜினியர் என்று போட்டுக் கொண்டு, லெட்டர்பேடிலும் அதைப் போட்டு செயல்படுகிறார்கள். எனவே, அரசு, என்ஜினியரிங் பட்டம் படித்தவர்கள் மட்டும்தான் என்ஜினியர் என்று போட்டுக் கொள்ள வேண்டும், டிப்ளமோ படித்தவர்கள் போடக்கூடாது என்று ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பட்டம் பெற்றவர்கள், தமது துறைகளில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பெற்றவர்கள், சிறப்பு முனைவர் பட்டம் பெற்றவர்கள் ஆகியோர் தங்கள் பெயருக்கு முன்னால் டாக்டர் என்று போடுவது வழக்கத்தில் இருந்து வருகிறது. தமிழ்நாடு பொறியாளர் சங்க உறுப்பினர்கள்—என்ஜினியர்ஸ் அசோசியேஷன்— தங்கள் பெயருக்கு முன்னால் ஈ.ஆர். என்று போட்டுக் கொள்வதும் வழக்கத்தில் இருந்து வருகிறது. இவை எல்லாம் பட்டங்கள். ஆனால் டிப்ளமோ என்பது பட்டம் அல்ல. அது பட்டயம். ஆகவே, அப்படி போட்டுக் கொள்வது முறையல்ல. இது குறித்து அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிப்ளமோ படித்து என்ஜினியர்களாக இருந்தவர்கள்—ஹைவேசில் என்ஜினியர்களாக இருந்து பிறகு அரசால் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள்—பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகும் தங்கள் லெட்டர்பேடில் என்ஜினியர் என்று தங்கள் பெயருக்கு முன்னால் போட்டுக் கொண்டு செயல்பட்டால் அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ஜினியர் என்று சொல்வது அந்தப் பதவியைக் குறிக்காமல், அந்தப் பட்டத்தைக் குறிப்பதாக இருந்தால் அவர்கள் போட்டுக் கொள்வதிலே தவறு இல்லையென்று அரசு கருதுகிறது.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 17, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

17—

ஆவடி நகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி

*524—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி நகராட்சிப் பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்குத் தேவையான கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?